**பத்திரிக்கை செய்தி, நாள் 22.05.2023**

தமிழ்நாடு முன்னாள் உயர்கல்வித் துறை அமைச்சரும், தற்போதைய பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி உறுப்பினருமான திரு.K.P.அன்பழகன் அவர்கள், அவர் அமைச்சராக இருந்த 01.04.2016 முதல் 31.03.2021 வரையிலான காலத்தில் அவரது பெயரிலும், அவரது மனைவி திருமதி.A.மல்லிகா, அவரது மகன்கள் திரு.A.சசிமோகன் மற்றும் திரு.A.சந்திரமோகன் ஆகியோர்கள் பெயரில் மொத்தம் ரூ.11,32,95,755/– அளவிற்கு வருமானத்துக்கு அதிகமாக முறைகேடாக சொத்து சேர்த்ததாக, தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. விசாரணையில், 58 இடங்களில் சோதனை நடத்தப்பட்டு வழக்குடன் தொடர்புடைய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது.

திரு.K.P.அன்பழகன் அவர்கள் அவரது உறவினர்களான திரு.P.ரவிசங்கர், திரு.P.சரவணன், திரு.P.சரவணக்குமார் மற்றும் நெருங்கிய கூட்டாளிகளான திரு.C.மாணிக்கம், திருமதி.M.மல்லிகா மற்றும் திரு.S.S.தனபால் ஆகியோர் உடந்தையுடன் அவரது பெயரிலும், அவரது குடும்பத்தினர் பெயரிலும் நிலங்கள், தொழில் முதலீடு, வங்கி இருப்புகள், நிலம், இயந்திர தளவாடங்கள், ஆபரணங்கள், வாகனங்கள் என சொத்துக்களாகவும், முறைகேடாக பெற்ற பணத்தை அவருக்கு சொந்தமான சரஸ்வதி பச்சியப்பன் கல்வி அறக்கட்டளைக்கு அனுப்பியதன் வழியாகவும் என மொத்தம் ரூ.45,20,53,363/– வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளார்.

மேற்படி வழக்கின் புலன்விசாரணை முடிக்கப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்கு தொடர மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்களிடம் இசைவாணை பெறப்பட்டது. இன்று 22.05.2023–ம் தேதி கனம் தருமபுரி சிறப்பு நீதிபதி/தலைமைக் குற்றவியல் நடுவர் அவர்கள் நீதிமன்றத்தில் மேற்படி குற்றம் சாட்டப்பட்ட 10 நபர்கள் மற்றும் சரஸ்வதி பச்சியப்பன் கல்வி அறக்கட்டளை மீது ஊழல் தடுப்பு சட்டம் 1988 மற்றும் 2018–ம் ஆண்டு திருத்தப்பட்ட ஊழல் தடுப்புச் சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டம் 1860–ன்படி உரிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

# PRESS NOTE

## Date: 22.05.2023

A case in Cr.No.03/AC/2022 of Dharmapuri V&AC was registered on 19.01.2022 against Tr.K.P.Anbalagan, Formerly Minister for Higher Education, now MLA, Palacode Assembly Constituency, Dharmapuri District and his wife Tmt.A.Malliga, his sons Tr.A.Sasimohan, and Tr.A.Chandramohan into the allegation of acquisition of assets and pecuniary resources to the tune of Rs.11,32,95,755/- which is disproportionate to their known sources of income and in this regard, a deeper probe was taken up. During the investigation, searches were conducted in 58 places and certain incriminating materials were seized.

The investigation disclosed that Tr.K.P.Anbalagan had acquired assets in the form of buildings, bank balances, business investments, landed properties, Machinery, Ornaments and vehicles in his name and the name of his above family members and circulating the ill-gotten money in the trust by the name "Saraswathi Pachiappan Educational and Charitable Trust" all to the extent of Rs.45,20,53,363/- with the active aid of his close relatives namely Tr.P.Ravisankar, Tr.P.Saravanan and Tr.R.Saravanakumar and close associates namely Tr.C.Manickam, Tmt.M.Malliga and Tr.S.S.Dhanapal, which is disproportionate to his known sources of income for which he could not account satisfactorily.

After completing the investigation, necessary sanction for prosecution was obtained from the Honourable Speaker of TamilNadu Legislative Assembly and the Charge Sheet was filed today 22.05.2023 before the Honourable Court of Special Judge/Chief Judicial Magistrate Dharmapuri against 11 accused including Saraswathi Pachiappan Educational and Charitable Trust under relevant provisions of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 and Indian Penal Code 1860.